IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 95/2022

Deposition of Witness : PW-2

Name : சேட்டு

Father's Name /W/o : த/பெ. லேட். சின்னப்பன்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : பன்னூர் கிராமம், திருவள்ளூர் வட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 08.02.2024

குறுக்கு விசாரணை:

1. வாதி சகுந்தலா மற்றும் பிரதிவாதி ஜோதி வீடு பக்கத்து பக்கம் வீடு என்றால் ரோட்டிற்கு எதிர்புறம் உள்ளது. அந்த சொத்திற்கு இருவருக்கும் அரசாங்கம் தான் பட்டா கொடுத்துள்ளது என்றால் ஆம். அந்த சர்வே எண் முழுவதும் கிராம நத்தம் என்றால் அதைப்பற்றி தெரியாது. கிராம நத்தத்தின் அடிப்படையில்தான் குடியிருப்பதற்காக ஏழைகளுக்கு அரசாங்கம் நெறிமுறைபடுத்தப்பட்டு வழங்கப்பட்ட பட்டா என்றால் ஆம். ஒருவருக்கு ஒரு பட்டா தான் கொடுப்பார்கள் என்றால் ஆம். வீடு கட்டுவதற்கு உள்ள இடம் மட்டும் தான் உரிமை என்றாலும் மற்ற சுற்றியுள்ள இடங்களை உரிமைகோர முடியாது என்றால் அது அவர்கள் அனுபவத்தில் உள்ளது. சட்டப்படி ஒருவருக்கு ஒரு பட்டாதான் வழங்க முடியும் என்றால் ஆம். ஒரு சொத்திற்கு அருகில் காலியாக இடம் இருந்தால் அது அரசாங்க சொத்து என்றால் பட்டா கொடுத்துள்ளார்கள். அதன் சர்வே எண். தெரியுமா

என்றால் சர்வே எண்.59/1பி பார்ட் ஆகும். பட்டா எண்.120 ஆகும். நீளம் அகலம் தெரியுமா என்றால் மொத்தம் 105 சதுர மீட்டர். நீளம் அகலம் தெரியவில்லை. வடக்கு தெற்கு யாருடைய வீடு உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. கிழக்கு மேற்கு யாருடைய வீடு உள்ளது தெரியுமா என்றால் கிழக்கு பக்கம் முனியம்மாள் வீடும், மேற்கு பக்கம் ரோடும் உள்ளது. தெற்கிலும் ரோடு உள்ளது.

2. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் திருவள்ளூர் மாவட்டம் பன்னூரில் உள்ளேன். அந்த பகுதியின் சிலர் நிலத்திற்கு பட்டா கொடுக்கபடாமல் உள்ளது என்றால் அனைவரும் பட்டா கொடுத்திருக்கிறார்கள். வழக்கு சொத்து வாதியிடையது இல்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.